OS.No. 94/2022

Dated :14.02.2024

Time: 03.40 pm to 04.05 p.m

P.W- 1 சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி சார்பாக குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை

**1)** என் தகப்பனார் பொன்னுசாமி, பிரதிவாதியும் அண்ணன் தம்பி ஆவார்கள். என் தகப்பனார் காலமாகிவிட்டார். என்னுடன் சேர்த்து வாதிகள் அனைவரும் என் தகப்பனாரின் வாரிசுகள். தாவா சொத்தின் ஒரு பகுதியை என் தாத்தா லிங்கம் பூசாரி 11.08.1964 அன்று கிரயம் பெற்ற சொத்து என்றால் சரிதான். அது அவருடைய அப்பாவின் சொத்தை 1960 ல் விற்று வாங்கிய சொத்தாகும். அவ்வாறு 1960 ஆவணத்தில் வேறு சொத்து வாங்குவதற்காக விற்பனை செய்வதாக வாசகம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி 1960 ல் சொத்தை என் தாத்தாவின் அம்மா சீட்டையம்மாள் விற்பனை செய்ததாகும்.

2) மேற்படி ஆவணத்தில் வேறு சொத்து வாங்குவதற்காக விற்பனை செய்வதாக வாசகம் எதுவும் இல்லை என்றும் அது குறித்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு. மேலும் 1964 ல் கிரய பத்திரத்தில் மேற்படி 1960 சொத்தை விற்பனை செய்து வாங்குவதாக வாசகம் இல்லை என்றால் சரிதான். 19.03.1984 ல் எனது தகப்பனார், பிரதிவாதியும் சேர்ந்துதான் மற்ற சொத்துக்களை கிரயம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அவ்வாறு 1964 ல் மற்றும் 1984 ல் வாங்கிய சொத்துக்களை என் தகப்பனாரும், 1ம் பிரதிவாதியும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

3) பிறகு அவர்களிடையே பிரச்சனை ஏற்பட்டதால் 15.02.2010 ஆம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட பாக பத்திரம் மூலம் என் தந்தையும், 1ம் பிரதிவாதியும் அந்த சொத்துகள் குறித்து பாகம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் நான் 3வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். மேலும் அந்த ஆவணம்படியே அசல் பிரதிவாதியிடமும், அதன் நகல் என் தகப்பனாரிடமும்

கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பாக பத்திரத்தின் அவரவர் தனித்தனியாக சுவாதீனம் எடுத்துக்கொள்வதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாக பத்திரத்தில் கண்டுள்ள விவரங்கள் சரியானவை என்றால் சரிதான்.

4) அந்த பாக பத்திரத்தின் போது நானும் என் தகப்பனாருடன் சென்றிருந்தேன். 2021 ல் என் தகப்பனார் இறக்கும் வரை அவர் என்னுடன் தான் இருந்தார். மேற்படி என் தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை மேற்படி பாக பத்திரம் குறித்து எவ்வித நடவடிக்கையும், ஆட்சேபனையும் எடுத்ததில்லை என்றால் சரியல்ல. அதன் பிறகு அடிக்கடி சண்டை வரும். மேற்படி என் தகப்பனார் ஆட்சேபனை செய்தார் என வழக்கில் எங்கும் குறிப்பிடாமல் தற்போது தான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் அது தவறு.

5) என் தகப்பனார் பாகமாக வந்த சொத்தை வங்கியில் அடமானம் வைத்து என் தகப்பனார் கடன் பெற்றார் என்றால் சரிதான். அதே போல் பிரதிவாதியும் அவருக்கு வந்த சொத்தை வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தகப்பனார் இறந்த பிறகு நானும், என் சகோதரருமான 4ம் வாதியும் சேர்ந்து அரசநத்தம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 2022, 2023 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு விவசாயம் மற்றும் கரவை மாடு கடன் மேற்படி என் தகப்பனாருக்கு வந்த பாக சொத்தை வைத்துதான் வாங்கினோம் என்றால் சரிதான்.

6) மேற்படி பாகத்தில் பிரதிவாதிக்கு உறுதி படுத்தப்பட்ட பாகமான 1.6 ஏக்கர் நிலமும், கிணற்றில் கூட்டு பாகமும் ஒதுக்கப்பட்டு இருந்தது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு ஒதுக்கியதில் தண்ணீர் உள்ளது. எங்களுக்கு ஒதுக்கியதில் தண்ணீர் இல்லை. பிரதிவாதிக்கு பாகம் பிரிவின் போது விவசாய மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் ஒரு வருட காலத்திற்கு அதை பயன்படுத்திக்கொண்டு அதற்குள்ளாக புதிய மின் இணைப்பு வாங்கிக்கொள்ள வேண்டும் என எங்களுக்குள் பேசிக்கொள்ளப்பட்டது. அவ்வாறு பிரதிவாதி மனு செய்து 2022 ல் தான் மின் இணைப்பு தரலாம் என மின் வாரிய துறையில் இருந்து உத்தரவு வந்தது என்றால் அது பற்றி தெரியாது.

7) நானும் மற்ற வாதிகளும் சேர்ந்து அசல் வழக்கு எண். 35/2022 என்ற வழக்கை பிரதிவாதி, அவர் மகன் மின் வாரிய துறைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் சொத்துக்களானது 25.02.2010 தேதியிட்ட பாக பத்திரம் மூலம் எங்களுக்கு வந்தது என்று தான் வழக்கில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அதில் பிரதிவாதிக்கு மின் இணைப்பு தரக்கூடாது என நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்தோம்.

(தரப்பினர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

Sd/- K.Ananthan
**Subordinate Judge,**
**Attur.**